## சமூகத் தொடர்பை ஏற்படுத்தல்

சமூகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தின் குழந்தையின் தொடர்புத் திறமை வளர்க்கப்படும்

எடுக்கவேண்டிய முயற்சிகள்:

### 1. உங்கள் குழந்தை உங்களுடன் விளையாட ஊக்கப்படுத்துங்கள்

உங்கள் குழந்தை விரும்பக்கூடிய விளையாட்டுப்பொருட்கள்-விளையாட்டுகள் போன்றவற்றை கவனியுங்கள். குழந்தையின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனியுங்கள். உங்கள் குழந்தையுடன் விளையாடுங்கள். உங்கள் குழந்தை செய்யும் செயற்பாடுகளைப்பற்றிப்பேசுங்கள். எளிமையான மொழியைப் பயன்படுத்துங்கள்.

### 2. விளையாட்டுகளில் முறை எடுக்கக் குழந்தைக்கு உதவுங்கள்

இதுவே உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இடையேயான முதல் தொடர்புப்படி

பாடல்களைப் பாடுங்கள். உங்கள் குழந்தைக்கு அப்பாடல் தெரியுமாயின், சிறிது காத்திருந்து அப்பாடலை உங்கள் குழந்தையே தொடர்ந்து பாட ஊக்கப்படுத்துங்கள்.

பந்து எறிந்து விளையாடுங்கள். பந்தைப்பின்னாலும் முன்னாலும் எறிந்து விளையாடும்போது முறை எடுக்க ஊக்கப்படுத்துங்கள்.

### 3. குழந்தை உங்களைக் கவனித்துப் பார்க்க ஊக்கப்படுத்துங்கள்

விளையாடும் போதும் நாளாந்த செயல்கள் செய்யும்போதும் ஒரு பொருளை முகத்துக்கு எதிரே நிறுத்தி அப்பொருளின் பெயரைக் கூறுங்கள்

குழந்தை பேச ஆரம்பிக்கமுதலே ஏதோவொருவிதத்தில் உங்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்த ஆரம்பித்துவிடும் என்பதை மனதில் வைத்திருங்கள்.

“அதிகம் வேண்டும்” என்று கேட்பதற்கு
“ஒரு பொருள் வேண்டும்” என்று கேட்பதற்கு
“வணக்கம் - போய் வருகிறோம்” என்று கூறுவதற்கு
“பெயரிடுவதற்கு”